முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக அரசு வருவாய் குறைவாக இருக்கிற நகரப் பஞ்சாயத்துகளை எல்லாம் கிராமப் பஞ்சாயத்துகளாக மாற்றுவது குறித்து யோசித்துக் கொண்டிருப்பதாக இந்த அவையிலே சொல்லப்பட்டது. அந்த நடவடிக்கை இப்போது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், இது மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 46, திரு. கே.எஸ். பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

46—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***27375—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், 47 வழியோர கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை அரசு விரைந்து செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியத்தைச் சார்ந்த 47 வழியோரக் கிராமங்களுக்கு, புதிய திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும். இத்திட்டப் பணிகள் வெகுவிரைவில், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

2003 நவம்பர் 5]

திரு. கே.எஸ். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரத்தால் தொடங்கப்பட்ட புதிய திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பெருந்துறை மற்றும் ஊத்துக்குளி ஒன்றியங்களைச் சேர்ந்த வழியோர கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 2005 ஏப்ரல் திங்களுக்குள் பயனுக்கு வர போர்க்கால அடிப்படையில் இன்று அந்தப் பணிகள் நடைபெற அனுமதி வழங்கிய, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது பெருந்துறை தொகுதி மக்களின் சார்பில் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. சி. மணி (குறுக்கீடு) மைக்கைப் போடுங்கள்.

திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டில், எந்தத் தேதியில் தொடங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பணியிடத்தில் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்றுக் குழாய்கள் அமைக்கும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் இறுதியாக, அனைத்துப் பணிகளும் முழுமையாக, 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முடிவுறும் என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.பெ. சாமிநாதன். (குறுக்கீடு)

திரு. கோ.சி. மணி: நான் கேட்டது, அந்தப் பணி தொடங்கப்பட்டது எப்போது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்விப் போடுங்கள். திரு. சாமிநாதன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இதற்குத் தனிக் கேள்விப் போட்டால் பதில் தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.பெ. சாமிநாதன்.

[2003 நவம்பர் 5

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் ஊத்துக்குளி, பெருந்துறை போன்ற பகுதிகளுக்கு தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை மேற்கொள்கிற வகையிலே, நிலத்தடி நீரை மேம்பாடு செய்கிற வகையிலே அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டம் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. சி. மணி அவர்களே, தாங்களே அமைச்சராக இருந்தபோது, பல கேள்விகளுக்குத் தனிக் கேள்விப் போடச் சொல்லி இருக்கிறீர்கள். அதேமுறையைத்தான் இப்போது அமைச்சரும் பின்பற்றுகிறார்.

திரு. கோ.சி. மணி: எல்லாவற்றிற்கும் தனிக் கேள்வி போடச் சொல்லமுடியாது. தொடர்புடைய கேள்விக்கு எப்படித் தனிக் கேள்வி போடச் சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாமிநாதன், சொல்லுங்கள்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை, ஊத்துக்குளி போன்ற பகுதிகளில் குடிநீரை மேம்பாடு செய்கிற வகையிலும், நிலத்தடி நீரைப் பெருக்குகிற வகையிலும் கழக ஆட்சியிலே பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை மேற்கொள்கிற வகையிலே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது அந்தப் பணி எந்த அளவில் உள்ளது என்பதைத் தங்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாமிநாதன், இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திருமதி செல்வி முருகேசன்.

திருமதி செல்வி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பெருந்துறை தாலுகாவைச் சார்ந்த சென்னிமலை ஒன்றியத்திற்கும் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பயன் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரளை என்ற இடத்தில் பெருந்துறை ஒன்றியத்தைச் சார்ந்த 30 குடியிருப்புகள் மற்றும் சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 71 குடியிருப்புகளில் வசிக்கும் 22,636 மக்கள் பயன்பெறுகிற வகையில்

இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

47—

தரைப் பாலம்

***37287—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வனத் துறை பகுதியில் சின்னாறும், பாம்பாறும் இணையும் கூட்டாறு என்னும் இடத்தில் மலைவாழ் மக்கள் பயன்படுத்த தரைமட்டப் பாலம் கட்ட வனத் துறை உரிய ஒப்புதல் வழங்குமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலைப்பேட்டை வனத் துறை பகுதியில் சின்னாறும், பாம்பாறும் இணையும் கூட்டாறு பகுதி வன உயிரின சரணாலயத்திற்கு உட்பட்ட பகுதியாகும். உச்ச நீதிமன்ற வழக்கு எண் 202/95 மற்றும் 337/95 ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்புகளின்படி, வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்கா ஆகியவற்றை வனமல்லாத மாற்று பணிகளுக்குப் பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-45

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கிணங்க உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை—சின்னாறு சாலையில் கிலோ மீட்டர் 28/2-லிருந்து சுமார் 7.5 கிலோமீட்டர் தூரத்தில் தளிஞ்சி என்ற மலைவாழ் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் 130 குடும்பங்கள்